‘தமிழ்நாடு’ என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும்

சங்கரலிங்கனாரின் புகழ் ஓயாது!

நினைவுநாளையொட்டி – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 15 -

“தமிழ்நாடு’ என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும் சங்கரலிங்கனாரின் புகழும் ஓயாது! தமிழ்நாடு வாழ்க!” என்று அவரது நினைவுநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

தமிழ்நாடு எனும் பெயருக்காக உயிரையே கொடுத்த உணர்வாளர் சங்கரலிங்கனார் நினைவு நாள்!

வரலாற்றில் பல பெயர்கள் இருக்கலாம். ஆனால், ஒரு பெயருக்காக உயிரையே இழந்த வரலாறுதான் விருதுநகர் தந்த வீரத்தியாகி சங்கரலிங்கனாருடையது.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு எனப் பெயர்சூட்ட வேண்டுமென 76 நாட்கள் உண்ணாநோன்பிருந்தார். இறுதியில் உயிரையே துறந்தார்.

ஆயினும் அன்றைய ஆட்சியாளர்கள் அவரது கோரிக்கையை



நிறைவேற்றவில்லை. கழக ஆட்சி அமையும்வரை காலம் கனியவில்லை.

வென்றது கழகம்! வந்தார் அண்ணா!

தமிழ்நாடு தமிழ்நாடானது!

வென்றது கழகம்! வந்தார் அண்ணா! நிறைவேற்றினார் தீர்மானத்தை! தமிழ்நாடு தமிழ்நாடானது!

தமிழ்நாடு பெயர்சூட்டலில் பல பேரின் போராட்டங்கள், தியாகங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சளைக்காத முயற்சிகள் அடங்கியுள்ளன. ஆனால், இப்போராட்டத்தில் தனது இன்னுயிரையே இழக்கத் துணிந்த சங்கரலிங்கனாரின் தமிழுணர்வுக்கு ஈடு இணை ஏதுமில்லை.



தமிழ்நாடு என்ற பெயர் இம்மாநிலத்தில் ஒலிக்குமட்டும் சங்கரலிங்கனாரின் புகழும் ஓயாது! தமிழ்நாடு வாழ்க!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

த.வெ.க. ஆட்சியின் அவலம்!

மின் மீட்டர் கணக்கீட்டில் தொடரும் குளறுபடி!

கூடுதல் கட்டணத்தால் நுகர்வோர் கடும் அவதி!

சென்னை, அக். 15 -

முதலமைச்சர் விஜய் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு மின் மீட்டர் கணக்கீட்டில் தொடரும் குளறுபடியால் நுகர்வோர் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், மின் நுகர்வோர் கடும் அவதிக்குள்ளாகி இருக்கின்றனர்.

மின் நுகர்வோர் பயன்படுத்தும் மின்சார பயன்பாடு குறித்த கணக்கீடு 2 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் மின்வாரியத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

த.வெ.க. ஆட்சி வந்த பிறகு மின் மீட்டர் கணக்கீட்டில் பல குளறுபடிகள் இருக்கின்றன என்று நுகர்வோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இதுவரை இல்லாத அளவுக்கு பல வீடுகளுக்கு இருமடங்கு கட்டணம் அதிகரித்துள்ளது என்றும், சில வீடுகளுக்கு பல மடங்கு கட்டணம் அதிகரித்துள்ளது என்றும் புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் மின்வாரியத்துக்கு புகார் அளித்தும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இது தொடர்பாக விளக்கம் கேட்டு சம்பந்தப்பட்ட மின் வாரியத்தை பொதுமக்கள் தொடர்பு கொண்டால் அங்கிருக்கும் அலுவலர்கள் மிக அலட்சியமாக பதில் அளிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் வேறு வழியில்லாமல் அதிகப்படியான கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மின் மீட்டர் கணக்கெடுப்பில் தொடர்ந்து குளறுபடி நிலவி வருவது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது, சென்னையில் பெரும்பாலான பகுதியில் உள்ள பல வீடுகளில் மின் மீட்டர் குறிப்பிட்ட யூனிட்டுகளை எட்டுவதற்கு முன்பே அதனை எட்டி விட்டதாக கூறி மின் கணக்கீடு செய்யப்பட்டு அதற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மின் நுகர்வோர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.


திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. அறிக்கை!

திருப்பூர், அக். 15 -

திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (15.10.2026 வியாழக் கிழமை) காலை 10.00 மணியளவில் உடுமலைப் பேட்டை பழனி சாலையில் அமைந்துள்ள தெற்கு மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில்,



தலைமை கழக பிரதிநிதிகள் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் இசை முன்னிலையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உடுமலைப் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளனர்.

அதுசமயம் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக துணை அமைப்புகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புக ளின் பிரதிநிதி கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 22.08.2026 அன்று நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்ட தீர்மானங்களின் படி ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழகங்கள் மறுசீரமைத்தல் குறித்து,

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சிப் பிரதிநிதிகளின் மக்கள் நலப்பணிகளை முடக்கும்

த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

ஆர்.எஸ்.பாரதி தலைமை! சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, அக்.15 -

“எல் நினோ” மழையின் தீவிர அபாயங்களை அலட்சிப்படுத்தியும் - மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!” என சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

உலக அளவில், எல் நினோ பொதுவாக வறட்சியை ஏற்படுத்தும் என்றாலும், 2026-ஆம் ஆண்டின் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் இயல்பைவிட மிக அதிக அளவில் மழைப்பொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதோடு, கோடை வெப்பம், குடிநீர் பற்றாக்குறை மற்றும் கடலோர அரிப்பு போன்ற பேரிடர்களையும் எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழ்நாடு அரசுக்கு வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது.



ஆனால், ‘ரீல்ஸ் ஆட்சி நடத்தி வரும் த.வெ.க. அரசு’ இப்பேரிடர் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்து வரும் நிலையில்,

‘வருமுன் காப்போம்’ என்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாரக மந்திரத்தின் அடிப்படையில், மக்கள் மீது அக்கறையின்றி குறட்டை விட்டு தூங்கும் அரசான ஆளும் த.வெ.க. அரசினை தட்டியெழுப்பும் வகையில்,

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகராட்சி பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கியும் வரும் தமிழ்நாடு அரசின் நிர்வாகச் சீர்கேட்டை கண்டித்து, சென்னை தெற்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் இன்று (15.10.2026, வியாழக் கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை, சைதாப்பேட்டை, ‘கலைஞர் பொன்விழா வளைவு” அருகில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் தலைமையில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு - சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த.வேலு, கழக கல்வியாளர் அணிச் செயலாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., - சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு தலைவர்கள் - மண்டலக்குழு தலைவர்கள்- மாநகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

ரூ.5 மின்சாரத்தை ரூ.37–க்கு வாங்கி

ரூ.2,880 கோடி மக்கள் பணத்தை வீணடிக்கும் த.வெ.க. அரசு!

தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

சென்னை,அக்.15 -

தி.மு.க. ஆட்சியில் (பிப்ரவரி - மே 2026): ஒரு யூனிட் மின்சாரம் ரூ.5.40 முதல் ரூ.9.50 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.

த.வெ.க. ஆட்சியில் (அக்டோபர் 2026): அதே மின்சாரம் ரூ.31.99 முதல் ரூ.37.00 வரை கொடுத்து வாங்கப்படுகிறது!

மே 23, 2026: “அதிக விலை, ஊழல் சந்தேகம்” என்று கூறி, முந்தைய குறைந்த விலை குறுகிய கால ஒப்பந்தங்களைத் தவெக அரசு ரத்து செய்தது.

ஜூன் 25, 2026: “நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் குறைந்த விலையில் மின்சாரம் வாங்குவோம்” என அமைச்சர் நிர்மல் குமார் வாக்குறுதி அளித்தார்.

செப்டம்பர் 9, 2026: அண்டை மாநிலமான ஆந்திரா, அக்டோபர் தேவைக்கான மின்சாரத்தை யூனிட் ரூ.16 - ரூ.20 என முன்கூட்டியே ஒப்பந்தம் செய்தது.

அக்டோபர் 12, 2026: தமிழ்நாடு அரசு ஜோசியம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, கடைசி நேரத்தில் யூனிட்டுக்கு ரூ.37 கொடுத்து அவசரக் கொள்முதல் செய்கிறது!

த.வெ.க.வின் நிர்வாகக் குளறுபடியால், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் இருளில் மூழ்குவதோடு, மின்கட்டண உயர்வில் மக்கள் பாதிக்கப்பட வேண்டுமா?

#TVK கரண்ட் திருடன்

இவ்வாறு ஐ.டி.விங் விமர்சித்துள்ளது.

ஆண்டியும் போண்டியும்




ஆண்டி : ஏன்யா; மின்சார பற்றாக்குறையைப் போக்க, இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு யூனிட் 37 ரூபாய்க்கு வாங்கப் போறாங்களாமே. ‘முறையா செயல்பட்டிருந்தா இந்த அநியாய விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இருந்திருக்காதுன்னு’ மின்சாரத்துறை முன்னாள் அதிகாரி ஒருத்தர் கூறி இருக்கிறாரே...!

போண்டி : **ஆமாம்யா! நீ சொல்றது உண்மைதான். இதனால 90 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட வாய்ப்பு ஏற்படும்ன்னு சொல்றாங்க. என்ன பண்றது. அடிச்ச காத்துல நேரா உச்சாணிக் கொம்புக்கு போயிட்டாங்க, முறையா செயல்பட அவங்களுக்கு எங்க தெரியப்போவுது.**

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரு. செயல்மணி

அக்டோபர் 15 (2014)



1963ஆம் ஆண்டு முதல் தலைவர் கலைஞர் அவர்களிடம் அணுக்கத் தொண்டராகவும் – உதவியாளராகவும் பணியாற்றி வந்தவர்.

“1989 தேர்தல் நேரத்தில் செயல்மணியின் தாயார் மறைவு செய்தி அறிந்து, அவரது மறைவிற்குக்கூட செல்லாமல் சென்னையிலே இருந்து, தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பின்தான் தாயாரின் துக்கம் விசாரிப்பதற்காக சொந்த ஊருக்கு சென்றான் என்றால், என்னைவிட தியாகத்திலே அவன் சிறந்தவன் என்று சொல்வதிலே நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்” என்றும்; என்னுடைய குடும்பத்திலே ஒருவன், என் பிள்ளைகளிலே ஒருவன் என்கிற முறையிலே வாழ்ந்து வளர்ந்தவன் செயல்மணி” எனவும்;

இரங்கல் செய்தியில் “இவனை சேவகனாகப் பெறவே என்ன தவம் செய்தேன்?” என்று தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.